**CC.No.**77/2024

**Date**: 12.03.2026

**எ.ம.சா. 1. வனிதா, க/பெ. சீனிவாசன், காரைக்குடி**

**(சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்துவைக்கப்பட்டது)**

**<u>முதல் விசாரணை</u>**

**1) புகார்தாரர் வீட்டில் நான் சமையல் வேலை பார்த்து வந்தேன். எனக்கு மாதம் ரூ. 3 ஆயிரத்து 500 சம்பளமாக வழங்கினார்கள். நான் மகளிர் குழு மூலமாக புகார்தாரருக்கு அறிமுகம் ஆனேன். புகார்தாரர் தேன்மொழி என்னை மகளிர் குழுவில் சேர்ந்து கொள்ள சொல்லி கேட்டுக்கொண்டார். அதற்கு என்ன வேண்டும் என்று நான் கேட்ட போது புகார்தாரர் எனது ஆதார் கார்டு மற்றும் வங்கி கணக்கு ஆவணங்களை கேட்டார் அதற்கு நான் காசோலையை புகார்தாரரிடம் கொடுத்தேன். கொரோனா காலகட்டத்தில் எனது கணவருக்கு வேலை இல்லாமல் இருந்தது. எனவே புகார்தாரரிடம் ரூ. 60 ஆயிரம் கைமாற்று கடனாக கேட்டேன். மேற்படி புகார்தாரர் எனக்கு 2 முறை 30 ஆயிரத்தை 6 சதவீத வட்டிக்கு கொடுத்தார். முதலில் நான் ரூ.20 ஆயிரம் திரும்ப செலுத்திவிட்டேன். பின்னர் ரூ. 7 ஆயிரம் வீதம் 3 முறை கொடுத்து 21 ஆயிரம் திரும்ப செலுத்திவிட்டேன். நான் ரூ.19 ஆயிரம்தான் செலுத்தவேண்டியுள்ளது. அப்போது நான் வேறு நபர் வீட்டில் வேலை பார்த்து வரும்போது என்னை தரக்குரைவாக பேசி என் மகன் முத்தையாவிடம் இருந்து 100 ரூபாய் பத்திரத்தில் கையொப்பம் பெற்றுக்கொண்டனர். இனிமேல் நான் 10 வட்டி செலுத்தவேண்டும் என்றும் மொத்தம் நான் ரூ. 2 லட்சம் தரவேண்டும் என்றும் புகார்தாரர் என்னை மிரட்டினார். பின்பு நான் காரைக்குடி காவல்துணை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் அளித்தேன். மேற்படி புகார் எ.ம.சா.ஆ.1 ஆகும்.**

**2) மேற்படி புகாரின்பேரில் காவல்துணை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் என்னையும் புகார்தாரரையும் அழைத்து விசாரணை செய்தார்கள். அப்போது புகார்தாரரை கந்துவட்டி**

கேட்ககூடாது என்றும், நான் கொடுக்கும் பணத்தை வாங்கிகொள்ளுமாறும் அறிவுறுத்தினார்கள். பின்பு 2-3 நாட்களுக்குள் ரூ. 9 ஆயிரம் ஏற்பாடு செய்து காரைக்குடி காவல்துணை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் வைத்து புகார்தாரரிடம் கொடுத்துவிட்டேன். பின்பு மீதமுள்ள ரூ.10 ஆயிரத்தை மீண்டும் காரைக்குடி காவல்துணை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் வைத்து கொடுத்துவிட்டு புகார்தாரர் கையொப்பம் செய்தார் அவரது தம்பியின் மனைவி சரண்யா என்பவர் சாட்சி கையொப்பம் செய்தார். மேற்படி உதவி காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார்தாரர் எழுதிக்கொடுத்த கடித நகல் எ.ம.சா.ஆ. 2 ஆகும். அப்போது நான் காவல்துணை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் எனது காசோலைகளை புகார்தாரரிடம் இருந்து திரும்ப பெற்றுதருமாறு கோரினேன். அதற்கு புகார்தாரர் மேற்படி காசோலை தொலைந்துவிட்டதாக காவல்துணை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் சொன்னார். நானும் கடனை திருப்பி செலுத்திவிட்டதால் நம்பிக்கையின் பேரில் வீட்டிற்கு வந்துவிட்டேன். தற்போது புகார்தாரர் தொலைந்துபோனதாக சொன்ன எனது காசோலையை பயன்படுத்தி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். எனவே இந்த வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.03.12 18:01:16 +0530

நீதித்துறை நடுவர்,

விரைவு நீதிமன்றம், காரைக்குடி.( மு.கூ.பொ)